ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 457) Dec (2) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவர்கள்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

பார்த்தசாரதி ஸ்ரீதரன்

உதவி: க்ருஷ்ணா ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)………...………………………………………3

2. பெரியாழ்வார் திருவாய்மொழி (வ்யாக்யானம்)……..…………………………….28

3. பெரிய திருமொழி (வ்யாக்யானம்)………...…………………………………………31

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 422)

திருவாய்மொழி ஆறாம் பத்து ஒன்பதாம் திருவாய்மொழி
நீராய் ப்ரவேசம்

வ்யாக்யானம் – "எங்குச் சென்றாகிலுங் கண்டு" என்றும், "வானவர்கோனைக் கண்டு" என்றும் தூது போகச்சொன்னார்; அவை போகமாட்டாதபடி தம்முடைய ஆர்த்த த்வநியாலே யழித்தார்; "மரங்களுமிரங்கும்" என்று அசேதநங்களிரங்காநின்றால், சிறிது சைதந்யமுடைய பக்ஷிகள் அழியக் கேட்க வேண்டாவிறே; "ஊற்றின்கண் நுண்மணல் போலுருகா நிற்பர் நீராய்" என்றது, தூதரையொழியன்றிறே. தம் பரிஸரத்தில் கால்நடை தந்து போவாரில்லையே.

விளக்கம் – திருவாய்மொழி (6-8-5) - எங்குச் சென்றாகிலும் கண்டு – என்றும், திருவாய்மொழி (6-8-8) - வானவர்கோனைக் கண்டு - என்றும் கூறி, தூது போகும் படியாக உரைத்தார். அவை செல்ல இயலாதபடி தனது துன்பம் நிறைந்த சொற்களால் தடுமாறச் செய்தார். ஆனால் இவ்விதம் பறவைகள் இரக்கம் கொண்டு ஈடுபட்டு நிற்குமோ என்பதற்கு விடை தருகிறார்; திருவாய்மொழி (6-5-9) – மரங்களும் இரங்கும் - என்பதாக, சிறிதும் அறிவில்லாத பொருள்களும் இரங்கும் என்றுள்ளபோது, சிறிது அளவு அறிவு கொண்ட பறவைகள் இரங்குவது குறித்துக் கூறவேண்டாம் அல்லவோ? திருவாய்மொழி (6-8-11) - ஊற்றின்கண் நுண்மணல் போலுருகா நிற்பர் நீராய் – என்பது, தூதுவர்கள் அல்லாமல் வேறு யாரும் அல்லர்; ஆகவே தன்னிடம் தனக்காகத் தூது செல்பவர்கள் வேறு யாரும் இல்லையே!

வ்யாக்யானம் – “அசேதநங்களுங்கூட அழிகிறவிடத்தில், பரமசேதநனானவனுக்குச் சொல்ல வேணுமோ?” என்று பார்த்து, தம்மிடற்றோசையையிட்டு அழைத்துக் கொள்ளப் பார்க்கிறார். தமக்கு ஆர்த்த த்வநி கிடக்க, வேறொருவர் போகவேண்டும்படியா யிருந்ததோ? “கலங்காப் பெருநகர”மான ஸ்ரீவைகுண்டத்திலும் தரிக்கவொண்ணாதபடி, கால்குலைந்து வரும்படி பெருமிடறு செய்து கூப்பிடுகிறார்.

விளக்கம் – ஆயினும் இவர் செய்தது என்ன? “அறிவற்ற வஸ்துக்களும் கூட எனது நிலையைக் கண்டு இரக்கம் கொள்ளும்போது, அனைத்து சேதநர்களையும் விட உயர்ந்த சேதநன் ஈடுபாடு கொள்வது குறித்துக் கூறவும் வேண்டுமோ?”, என்று ஆராய்ந்து, தனது துன்ப ஒலியை எழுப்பி, அவனைத் தன்னிடம் அழைத்துக் கொள்ள முயல்கிறார். ஆனால், தனக்குத் துன்ப ஒலி உள்ளபோது, வேறு ஒருவர் அவனிடம் செல்ல வேண்டும்படியாக உள்ளதோ என்பதற்கு விடை தருகிறார்; இவருடைய இத்தகைய துன்ப ஒலியின் உறைப்பைக் கூறுகிறார்; மூன்றாம் திருவந்தாதி (51) – கலங்காப் பெருநகரம் - என்பதாக உள்ள ஸ்ரீவைகுண்டத்தில் இருப்பு கொள்ளாமல், கால்குலைந்து அவன் ஓடி வரும்படியாக பெருத்த துன்ப ஒலியை எழுப்பி அவனை அழைக்கிறார்.

வ்யாக்யானம் - இனித்தான் தூது போவார்க்கு, காலாலேயாதல் சிறகாலேயாதல் போகவேண்டுகையாலே தடையுண்டு; இவர் மிடற்றோசைக்குத் தடையில்லையிறே! இவர் படுகிற வ்யஸநத்துக்கு ஹேது சொல்லப் போகாது, பிராட்டி சிறையிருந்ததுக்கு ஹேது சொல்லப்போகாதாப்போலே. அவளிருப்பு பராநுக்ரஹத்தாலே யானாற்போலே இவருடைய வ்யஸநமும் பராநுக்ரஹத்துக்கு உடலாயிருக்கிறபடி. அவள் சிறையிருந்தபடியை ஸ்ரீவால்மீகி பகவானெழுதி வைத்து இன்று நாடெல்லாம் வாழ்கிறாப்போலே, அன்று இவர்தாம் வ்யஸநப்பட்டாரே யாகிலும், இவர் அருளிச்செய்த ப்ரபந்தங்கள் லோகத்துக்குத் தண்ணீர்ப்பந்தலாயிற்றது. திருக்குழலோசையாலே திருவாய்ப்பாடியிற் பெண்களெல்லாம் பட்டத்தைத் தம்மிடற்றோசையாலே அவன் படும்படி பண்ணுகிறார்.

விளக்கம் – இவருக்குக்காகத் தூது செல்பவர்கள் இல்லை என்பதால், தானே அழைக்கிறார் என்று கூறப்பட்டது; அடுத்து, அவ்விதம் தூது செல்பவர்கள் உள்ளனர் என்றாலும், தனது அழைத்தல் என்பதே சிறந்த உபாயம் என்பதை "இனித்தான்" என்று கூறுகிறார்; அதாவது, தூது செல்பவர்களுக்குக் கால்கள் வேண்டும் அல்லது சிறகுகள் வேண்டும்; ஆகவே தடைகள் உண்டு; ஆனால் இவருடைய புலம்பல் ஓசைக்குத் தடை ஏதும் இல்லை அல்லவோ? ஆனால், திருவாய்மொழி (2-6-2) - பக்கம் நோக்கு அறியான் என் பைந்தாமரைக் கண்ணனே - என்று கூறுவதற்கு ஏற்ப, பக்கம் நோக்கு அறியாதவன், அவரை இவ்விதம் கூப்பிட வைப்பதற்கான காரணம் என்ன என்பதை கூறுகிறார்; ஸீதை சிறையில் இருந்தமைக்கான காரணம் என்னவென்று அறியாதது போன்று, இவர் அடையும் துன்பத்திற்கான காரணமும் அறிய இயலாது. சரி, கர்மத்தைக் காரணம் என்று கூறலாம் அல்லவோ? இதற்கு "அவள் இருப்பு" என்று தொடங்கி விடை அளிக்கிறார். ஸீதையின் இலங்கை இருப்பு என்பது, அவள் மற்றவர்கள் மீது காண்பிக்கும் கருணை காரணமாகவே ஆகும் என்பது போன்று, இவருடைய துன்பமும், இவர் மற்றவர்கள் மீது வைக்கும் கருணையின் காரணமாகவே உள்ளது; அதாவது, மற்றவர்களுக்குப் புகலிடமாக ஸீதை இலங்கையில் இருந்தது போன்று, இவரும் மற்றவர்களுக்குப் புகலிடமாக விளங்கி துக்கத்தில் இருந்தாலும், இவர் சில காலம் இந்த உலகத்தில் இருந்தால் "நாடாகத் திருந்தும்" என்று எண்ணி அவன் விட்டு வைப்பதால், இவர் அடையும் துன்பத்திற்கான காரணம் கர்மமே ஆகும் என்றும் கூற முடியாது. ஸீதை சிறையிலிருந்தது குறித்து ஸ்ரீவால்மிகி பகவான் எழுதி வைத்து, அதனைப் படித்து இன்று நாடு முழுவதும் நல்வாழ்வு அடைந்தபடி உள்ளது; இதனைப் போன்று அன்று இவர் துன்பத்தில் இருந்தார் என்றாலும், இவர் அருளிச்செய்த ப்ரபந்தங்களானவை, உலகிற்குத் தண்ணீர்ப்பந்தல் போன்று உள்ளன. ஆனால் இருவருடைய புலம்பல் ஒலிக்கு அவன் ஈடுபவனோ என்பதற்கு விடை அளிக்கிறார்; இதற்கு "ஸிம்ஹ அவலோகந ந்யாயம்", அதாவது சிங்கம் நடக்கும்போது திரும்பிப் பார்த்தபடி செல்லும் வழக்கத்தின்படி, உதாரணத்துடன் விடை அளிக்கிறார்; அவனுடைய திருக்குழல் ஓசை மூலம் திருவாய்ப்பாடியில் இருந்த பெண்கள் அனைவரும் அடைந்த நிலையை, அவன் இவருடைய இந்தப் புலம்பல்களைக் கேட்டு அடைகிறான்; இங்கு "ஸிம்ஹ அவலோகந ந்யாயம்" எப்படியென்றால், "திருக்குழல்" என்று தொடங்கும் வாக்கியத்தை, முன்புள்ள

“இவர் மிடற்றோசைக்குத் தடையில்லையிறே” என்ற வாக்கியத்துடன் சேர்ப்பதன் மூலம் ஆகும்.

வ்யாக்யானம் – “வாரீர்! நீர் நம்மை யிருந்தவிடத்தில் இருக்கவொட்டாதே இங்ஙன்படுத்துகிறதென்? நாம் உம்மை விட்டுத் தூரப் போனோமோ? ஏதேனுமொன்றைப் பற்றினாலும் அது நம்மைப் பற்றிற்றென்று சொல்லலாம்படியிருக்கிற ஜகதாகாரதையைக் காட்டினோமே” என்று அவன் திருவுள்ளமாக; அதில் குறையென்? நீ ஜகச்சரீரனாய் நிற்கிற இந்த ஜ்ஞாநமெனக்கில்லையோ? இந்த ஜ்ஞாநந்தானேயிறே “அஸாதாரணாகாரத்தையும் காணவேணும்” என்னப் பண்ணுகிறது; எனக்கு ப்ராப்யமானது கிடக்க, அல்லாதவற்றைக் காட்டினால் அப்ரயோஜநமென்கிறார்.

விளக்கம் – முதல் பாட்டில், இந்த ஜகத் என்பதே உருவமாக உள்ள தனது தன்மையை ஸர்வேச்வரன் ஏன் கூறுகிறான் என்பதற்கு விடை அளிக்கிறார்; இது முன்பு கூறப்பட்ட” திருவாய்மொழி (4-1-2) - யாவையுமாய் யாவருமாய் - என்பதைத் திருவுள்ளத்தில் கொண்டு ஆகும். ஸர்வேச்வரன் ஆழ்வாரிடம், “வாரீர் ஆழ்வாரே! நாம் நமது இடத்தில் இருக்கவிடாமல் நீவிர் ஏன் நம்மை இவ்விதம் படுத்தியபடி உள்ளீர்? நாம் உம்மை விட்டு அகன்று நீண்ட தூரமாகச் சென்றோமா? நீவிர் எந்த ஒன்றைப் பற்றினாலும், அது நம்மையே பற்றியபடி உள்ளதாகும் என்று கூறலாம்படியாக, இந்த ஜகத்தையே நாம் நம்முடைய உருவமாகக் கொண்ட நிலையை உமக்கு முன்பே காண்பித்தோம் அல்லவோ?”, என்றான். இதற்கு ஆழ்வார் ஸர்வேச்வரனிடம், “நீ இந்த ஜகத்தையே உனது திருமேனியாகக் கொண்டுள்ள ஞானம் எனக்கு இல்லையோ? உள்ளது, ஆனால் இத்தகைய ஞானம் அல்லவோ, உனக்கே உரியதான இருப்பையும் நான் காணவேண்டும் என்னும்படி என்னைத் தூண்டுகிறது? ஆகவே எனக்கு அந்தப் பேறானது வேண்டும் என்றுள்ளபோது, அதனைக் காட்டிலும் வேறு விஷயங்களைக் காண்பித்து எந்தப் பயனும் இல்லை”, என்கிறார்.

வ்யாக்யானம் - அத்தையும் உன் ஐச்வர்யத்துக்குப் புறம்பல்லாமையாலே வேணுமாகில் ப்ரதிபத்தி பண்ணுகிறேன்; அத்தால் வந்தது, உன்னதானவற்றை “என்னது” என்றிருக்கிற ப்ரமம் நிவ்ருத்தமாகிறது. அர்ஜுநனும் ஸ்ரீவிச்வரூபங் கண்டவநந்தரத்திலே “தேநைவ ரூபேண சதுர்ப்புஜேந” என்று அஸாதாரணமான

வடிவை யெனக்குக் காட்டவேணும் என்றானிறே. என் ஆர்த்த த்வநி கேட்டிரங்கி வந்திலையாகிலும், உன்னுடைய விபூதி யழியாமல் நோக்கவேணுமாகில், வாவென்கிறார் என்றுமாம். இவருடைய ஆர்த்த நாதந்தான் அவனுக்கு உபயவிபூதியிலும் குடியிருப்பரிதாய்க் காணும் இருக்கிறது.

விளக்கம் - ஆனால் இவன் ஜகத்தைத் தனது திருமேனியாகக் கொண்டிருத்தல் என்றுள்ள நிலையானது பேறு இல்லையோ என்பதற்கு விடை அளிக்கிறார். அந்த நிலையும் உனது எல்லையற்ற ஐச்வர்யத்திற்குப் புறம்பாக இல்லாத காரணத்தால், உனக்கு வேண்டும் என்றால், அறிந்து கொள்கிறேன். இதன் மூலம் கிட்டிய பலன் என்ன என்றால், உனக்கு உடைமையாக உள்ள அனைத்தையும் என்னுடையது என்று கொண்டாடிய எனது மயக்கம் நீங்கப் பெற்றது ஆகும். “இத்தகைய ஞானம் அல்லவோ, உனக்கே உரியதான இருப்பையும் நான் காணவேண்டும் என்னும்படி என்னைத் தூண்டுகிறது” என்று கூறியதற்கு ஓர் உதாரணம் காண்பிக்கிறார்; அர்ஜுனன் விச்வரூபத்தைக் கண்ட பின்னர், கீதை (11-40) - தேநைவ ரூபேண சதுர்ப்புஜேந - பல திருக்கரங்கள் கொண்ட விச்வ மூர்த்தியே! உன்னை நான் நான்கு திருக்கரங்களுடன் கூடிய வடிவத்தில் காண விரும்புகிறேன் – என்று, “உனக்கே உரிய வடிவத்தைக் காணவேண்டும்” என்று கூறினான் அல்லவோ? எனது துன்ப ஒலியைக் கேட்டு இரங்கி நீ வரவில்லை என்றாலும், உனது உடைமையாகிய பலவற்றில் ஒருவனாக உள்ள நான் அழியாமல் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவாவது வரவேண்டும் என்கிறார் என்றும் கூறலாம். அவன் வராவிட்டால் அழியுமோ என்பதற்கு விடை தருகிறார். இவருடைய துன்பம் நிறைத்த ஒலியானது அவனுக்கு இரண்டு விபூதிகளிலும் இருப்பதற்கு அரிதாக ஆக்குகிறது.

6-9-1. நீராய் நிலனாய் தீயாய் காலாய் நெடுவானாய்
சீரார் சுடர்கள் இரண்டாய் சிவனாய் அயனானாய்
கூரார் ஆழி வெண்சங்கு ஏந்தி கொடியேன் பால்
வாராய் ஒரு நாள் மண்ணும் விண்ணும் மகிழவே

பொருள் - நீரும், அந்த நீரின் கார்யமான பூமியும், அக்னியும் வாயுவும், இந்த நான்கு பூதங்களைக் காட்டிலும் ப்ரதானமான ஆகாசமும் என்பதான அனைத்தையும் ஸ்ருஷ்டித்து, அவற்றுக்குள் புகுந்து, அவற்றின் ஆத்மாவாகவும்; வ்யஷ்டி ஸ்ருஷ்டிக்கு ப்ரதான பூதராகவும், சந்த்ர சூர்யர்களும், ருத்ரன்,

நான்முகனும் உனக்குச் சரீரமாகும்படி அவர்களுடைய அந்தர்யாமியாக உள்ளவனே! இத்தகைய உனக்கே உரிய நிலை மட்டும் அல்லாமல், அடியார்களுடைய விரோதியை அழிப்பதில் கூர்மை கொண்ட சக்கரத்தாழ்வானையும், அடியார்களுக்குப் பவ்யமாக பரிசுத்தமான வெண்மையைக் கொண்ட ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும் திருக்கரங்களில் ஏந்தி, லீலா விபூதி மற்றும் நித்ய விபூதி ஆகிய இரண்டும் வேறுபாடு இன்றி உகக்கும்படியாக, என்பக்கம் ஒருநாளாவது நீ நடந்து வரவேண்டும்.

அவதாரிகை – "ஜகதாகாரனாயிருக்கிறபடியைக் காட்டித் தந்தோமிறே" என்ன; அது போராது; அஸாதாரணமான வடிவைக் காணவேணுமென்கிறார்.

விளக்கம் - "இந்த ஜகத்தையே நமது திருமேனியாகக் கொண்டுள்ள நிலையை நாம் உமக்குக் காண்பித்துத் தந்தோம் அல்லவோ?", என்ற ஸர்வேச்வரனிடம் ஆழ்வார், "அது போதாது. உனக்கே உரிய வடிவத்தைக் காண்பிக்கவேண்டும்", என்கிறார்.

வ்யாக்யானம் - (நீராய் நிலனாய் இத்யாதி) "இதறியாமல் அவ்வருகே யாசைப்படுகிறார்" என்று கொள்ளவொண்ணாதபடி, தாம் அறிந்தமை தோற்ற விண்ணப்பஞ் செய்கிறார். (நீராய்) நாராயணனாவது பண்டேயறிவ னென்கிறார். "நீர்தொறும் பரந்துளன்" என்றாரிறே கீழ். (நீராய்) "அப ஏவ ஸஸர்ஜாதௌ" என்கிறபடியே ஏற்கனவே ஜல ஸ்ருஷ்டியைப் பண்ணி அநந்தரம் ப்ருதிவ்யாதிகளை யுண்டாக்கி, இவற்றைக் கொண்டு கார்யங் கொள்ளுமிடத்தில் ஒன்றிலொன்று அதிகமாக வேண்டியிருக்குமிறே; "ஸமேத்யாந்யோந்ய ஸம்யோகம் பரஸ்பர ஸமாச்ரயா:" என்றிறே ஸ்ருஷ்டி க்ரமந்தான்;

விளக்கம் – (நீராய் நிலனாய் இத்யாதி) – "இந்த ஜகத்தே தனது சரீரம் என்றுள்ள தன்மை" இவருக்கு அடையக்கூடிய இலக்காக இல்லை என்றால், "யாவையும் யாவருமாய் நின்ற மாயன்" என்று அனைத்தையும் தொகுத்துக் கூறாமல், "நீராய் நிலனாய்" என்று தொடங்கி, தனித்தனியே ஏன் விவரித்துக் கூறவேண்டும் என்பதற்கு விடை அளிக்கிறார்; "இவற்றை அறியாமல் அவன் விஷயத்தில் இவர் ஆசைப்படுகிறார்" என்று யாரும் கூற இயலாதபடி, தான் அறிந்தவை வெளிப்படுத்தும்படியாக விண்ணப்பம் செய்கிறார். (நீராய்) - ஜலத்தின் அந்தர்யாமியாக உள்ள தன்மையைக் கூறுகிறார்; நாராயணன் என்ற தன்மையை

முன்பே அறிவேன் என்கிறார். அதாவது தண்ணீருக்குக் காரணமாக, அதனைத் தனது சரீரமாகக் கொண்ட இருப்பை நான் முன்பே அறிவேன் என்கிறார். தான் முன்பே அறிந்தமைக்கு சூசகம் என்ன என்பதற்கு விடையாக திருவாய்மொழி (1-1-10) - நீர்தொறும் பரந்துளன் - என்றார். (நீராய்) - பஞ்சபூதங்களைக் கூறும்போது, முதலில் நீரைக் கூறுவதற்கான ப்ரமாணம் காண்பிக்கிறார்; மநுஸ்ம்ருதி (1-8) - அப ஏவ ஸஸர்ஜாதௌ – முதலில் நீரைப் படைத்தான் – என்பதற்கு ஏற்ப நீரை முதலில் ஸ்ருஷ்டி செய்து, அதன் பின்னர் நிலம் போன்றவற்றை உண்டாக்கி, இந்தப் பஞ்சபூதங்கள் கொண்டு கார்யப்பொருள்களை உண்டாக்குவதில், ஒன்றில் ஒன்று அதிகமாக இருக்கவேண்டும் என்பதாக ஏற்படுத்தினான்; இதன் மூலம் பஞ்சீகரணத்தை கூறினார். "ஒன்றில் ஒன்று அதிகமாக வேண்டியிருக்குமன்றோ" என்பதன் மூலம், "பிரிக்கப்படும் ஒரு பாதியைக் காட்டிலும், பிரிக்கப்படாத ஒரு பாதி முதன்மையாக இருக்கவேண்டும்" என்று கூறப்பட்டது. "ஒன்றில் ஒன்று அதிகமாக" என்பதற்கு ப்ரமாணம் ஸ்ரீவிபு (1-2-54) - ஸமேத்யாந்யோந்ய ஸம்யோகம் பரஸ்பர ஸமாச்ரயா: – பஞ்சபூதங்களும் ஒன்றில் ஒன்று கலந்து, ஸம்பந்தம் அடைந்தன - என்பதாக ஸ்ருஷ்டி முறை உள்ளது.

வ்யாக்யானம் - இவைதான் ஏக த்ரவ்யமுமன்றே; அநேக த்ரவ்யமா யிருக்கச்செய்தே ஏக த்ரவ்யமாக்கி ஏக கார்யங் கொள்ள வேணுமிறே: அது செய்யும்போது, குலாலனானவன் மண்ணும் நீரும் செதுகுங் கூட்டிச் சேரத் துகைத்து கடாதிகளாய்க் கொண்டு பரிணமிப்பிக்குமாபோலே, ஜலத்தை யுண்டாக்கி, அது த்ரவீ பூதமாயிருக்கையாலே அத்தோடு கடினமான பதார்த்தத்தைக் கூட்டி, பின்னையும் நெகிழ்ந்திருக்கையாலே அத்தைச் சிறிது வலிக்கைக்காக தேஜ: பதார்த்தத்தை யுண்டாக்கி, அதுதான் மிகைத்துத் தீயுமளவானவாறே அத்தையாற்றுகைக்குக் காற்றை யுண்டாக்கி, அது, தனக்கு ஸஞ்சரிக்கைக்காக அவகாச ப்ரதாநம் பண்ணும் ஆகாசத்தை யுண்டாக்கி. இவ்வளவும் ப்ரதம ஸங்கல்பந் தன்னையே கொண்டு அண்ட ஸ்ருஷ்டியைப் பண்ணிநின்றது; இனி, பெரியதொரு மாளிகையைச் சமைத்து இருள் உறைய விட்டு வைக்கவொண்ணாதிறே; அதுக்கு இரண்டு விளக்கிட்டாற்போலே சந்த்ர சூர்யர்களை யுண்டாக்கி, நீர்க் களிப்பு அறுகைக்கும் ஆப்யாயநத்துக்குமாக இருவரையுமுண்டாக்கினபடி.

விளக்கம் – ஆனால், ஒன்றில் ஒன்று அதிகமாக உள்ளதை ஸ்ருஷ்டி வரிசையாக ஏன் கொள்ளவேண்டும்? அனைத்தும் சமமாக உள்ளதையே ஸ்ருஷ்டி முறையாகக் கொள்ளாமல் அல்லவோ? இவற்றுக்கு விடை தருகிறார்; இதற்கு ஸ்ரீவிபு (1-2) - நாநா வீர்யா: ப்ருதக் பூதா - என்ற ச்லோகத்தின் அடிப்படையில் பொருள் கூறுகிறார். இவை அனைத்தும் ஒரு பொருள் அல்ல; இவை பல பொருள்களாக உள்ளபோதிலும், ஒரே பொருளாக்கி, ஒரு கார்யம் செய்து கொள்ளவேண்டும் அல்லவோ? இவ்விதம் பல பொருள்களையும் ஒரே பொருளாக்கி கார்யம் கொள்ளவேண்டும் என்பதற்கு உதாரணம் காண்பிக்கிறார்; ஒரு குயவர், மண்ணையும் நீரையும் ஒன்றாகக் சேர்த்து, நன்கு சுற்றி, குடம் போன்ற பொருள்களை உண்டாக்குகிறார்; இது போன்று இங்கு முதலில் நீர் உண்டாக்கப்பட்டு, இது நீர்ப்பண்டமாக உள்ளதால் அதனுடன் கடினமான பொருள்களைச் சேர்த்து, பின்னரும் அது நெகிழ்ந்துள்ளதால் அதனை மேலும் சற்று கடினமாக்க ஒளியை ஏற்படுத்தி, இவை அனைத்தையும் தனது முதல் ஸங்கல்பத்தை மட்டுமே கொண்டு, அண்ட ஸ்ருஷ்டியைச் செய்தான். அடுத்து, பெரிய ஒரு மாளிகையை ஏற்படுத்திய பின்னர், அதனை இருளில் உரையும்படிச் செய்யக்கூடாது அல்லவோ? ஆகவே இங்கு இரண்டு விளக்குகள் வைத்தது போன்று சந்த்ரசூர்யர்களை ஏற்படுத்தினான். இந்த இருவரில் ஒருவரை மட்டும் படைத்தால் போதாதோ? இருவர் எதற்கு? இதற்கு விடை அளிக்கிறார். நீர்களிப்பு அறுவதற்காகவும், வளர்ச்சி பெறுவதற்காகவும் இரண்டு பேரையும் ஸ்ருஷ்டித்தான்.

வ்யாக்யானம் - (சிவனாய் அயனானாய்) அண்டாந்தாவர்த்திகளாய்க் கொண்டு நின்று, ஒருவன் மனைந்து கொண்டு வர ஒருவன் அழித்துக் கொடு வரும்படி ப்ரஹ்ம ருத்ரர்களை யுண்டாக்கி. ருத்ரனை முற்படச் சொல்லுவானென்? என்னில், அப்யய பூர்விகையாயிறே ஸ்ருஷ்டியிருப்பது. “நீராய் நிலனாய்” என்றத்தோடொக்க. “சீரார் சுடர்களிரண்டாய்” என்கையினாலே, “யஸ்யாத்மா சரீரம் யஸ்ய ப்ருதிவீ சரீரம்” என்கிறபடியே, சேதநாசேதங்களிரண்டும் அவனுக்கு சரீரவத் பரதந்த்ரமென்னுமிடஞ் சொல்லுகிறது. “சீரார் சுடர்களிரண்டாய்” என்றும், “சிவனாயயனானாய்” என்றும் ஸமாநாதிகரிக்கையாலே ஈசிதவ்யங்களோடு ஈச்வராபிமாநிகளோடு வாசியற தத் பரதந்த்ர மென்னுமிடஞ் சொல்லிற்று.

விளக்கம் – (சிவனாய் அயனானாய்) - அண்டங்களுக்குள் வாழ்பவராக, ஒருவன் படைத்தபடி உள்ளபோது, ஒருவன் அழித்தபடி உள்ளதாக நான்முகனையும் ருத்ரனையும் உண்டாக்கி. ஆனால், இங்கு படைப்பவனாகிய நான்முகனை முதலில் கூறாமல், அழிப்பவனாகிய ருத்ரனை ஏன் முதலில் கூறுகிறார்? ஏனென்றால், அழித்தலை முற்படக்கொண்டு அல்லவோ படைத்தல் உள்ளது என்பதால் ஆகும். “நீராய் நிலனாய்” என்பதைத் தொடர்ந்து சந்த்ர சூர்யர்களைக் கூறியதற்கும், சந்திர சூர்யர்களைக் கூறியதைத் தொடர்ந்து நான்முகன் ருத்ரர்களைக் கூறியதற்கும் உள்ள எண்ணம் என்ன என்பதைக் கூறுகிறார்; “நீராய் நிலனாய்” என்பதுடன் சேரும்விதமாக “சீரார் சுடர்கள் இரண்டாய்” என்று கூறியதால், ப்ருஹத் உபநிஷத்தில் – யஸ்ய ஆத்மா சரீரம் யஸ்ய ப்ருதிவீ சரீரம் - யாருக்கு ஆத்மா சரீரமோ, யாருக்கு ப்ருத்வீ சரீரமோ - என்பதற்கு ஏற்ப, சேதநங்கள் மற்றும் அசேதநங்கள் ஆகிய அனைத்தும் அவனுக்குச் சரீரம் போன்று, அவன் வசப்பட்டவை என்பது கூறப்பட்டது. “சீரார் சுடர்களிரண்டாய்” என்றும், “சிவனாய் அயனானாய்” என்றும் ஒற்றுமைப்படுத்திக் கூறுவதால், நியமிக்கும்படுகின்ற பொருள்களாகிய சந்திரன் சூர்யன், நியமிப்பவர்களாகத் தங்களை எண்ணிக் கொள்ளும் நான்முகன் ருத்ரன், என்பதான வேறுபாடு ஏதும் இன்றி அனைத்தும் அவன் வசப்பட்டவை என்பது வெளிப்படுகிறது.

வ்யாக்யானம் - ஜகத் ஸ்ருஷ்டி பண்ணிற்று ஸ்வப்ராப்திக்காகவன்றோ? ஸ்வப்ராப்தியைப் பண்ணித் தந்தாலன்றோ நீ ஒரு காரியம் செய்தாயாவது? ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநமாவது நித்யது:கியானவனை “அந்தமில் பேரின்பத்தே” கொடு போய் வைக்கையன்றோ. அது கிடக்க, இத்தை யுண்டாக்கினதுக்கு ப்ரயோஜநம் நீ பெற வேண்டாவோ? “நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்ச் சீரார் சுடர்க ளிரண்டாய்ச் சிவனாயயனானாய்” என்று இவர் தமக்கு ஈச்வர வ்யாபாரம் அடங்கலும் மனையடைவே எண்ணுவாரைப்போலே அதிப்ரகாசமா யிருக்கிறபடி.

விளக்கம் – அடுத்து “நீராய் நிலனாய் … அயன் ஆனாய்” என்பதற்கு இரண்டு பொருள்கள் அருளிச்செய்கிறார். இவற்றில், முதல் கருத்தாக, “இந்த ஜகத்தையே தனது சரீரமாகக் கொண்ட இருப்பைக் காட்டினால் போதாது. உனக்கே உரிய திருமேனியைக் காண்பிக்க வேண்டும்” என்பதை இந்தப் பாசுரத்தின் அவதாரிகை

மூலமாகவும், “இது அறியாமல்” என்று வ்யாக்யான தொடக்கத்தின் மூலமாகவும் கூறினார். அடுத்து இரண்டாவது கருத்தாக, ஸ்ருஷ்டியின் பயன் என்பது அனைவரும் மோக்ஷம் பெறுவதே ஆகும் அல்லவோ என்று கூறி, இதனை “ஜகத் ஸ்ருஷ்டி” என்பது தொடங்கி அருளிச் செய்கிறார்; இந்த ஜகத்தை நீ படைத்தது, இவை உன்னை அடையவேண்டும் என்பதற்காக அல்லவோ? இவ்விதம் “உன்னை அடைதல்” என்பதை நீ செய்தால் மட்டுமே, நீ ஒரு கார்யம் செய்தவன் என்றாகிறாய்! ஸ்ருஷ்டியின் ப்ரயோஜனம் என்பது, எப்போதுமே துக்கத்தில் உள்ளவனை “அந்தமில் பேரின்பத்தே” என்பதாக உள்ல மோக்ஷத்திற்குக் கொண்டு செல்வது அல்லவோ? எனது துயரத்தைப் போக்குதல் என்பது ஒருபுறம் உள்ளபோது, இந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்த ப்ரயோஜனத்தை நீ பெறவேண்டாமோ? அவனைட் தனது கண்களால் காணவேண்டும் என்பது மட்டும் அல்லாமல், ஸ்ருஷ்டித்தல் போன்ற செயல்களையும் அருளிச்செய்ததால், இவருடைய ஞானத்தின் தெளிவை எண்ணி, வ்யாக்யானம் செய்தவர் “*நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்ச் சீரார் சுடர்க ளிரண்டாய்ச் சிவனாயயனானாய்*” என்று ஈடுபடுகிறார். அதாவது, “*நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்ச் சீரார் சுடர்க ளிரண்டாய்ச் சிவனாயயனானாய்*” என்று ஆழ்வார்க்கு ஈச்வரனுடைய செயல்கள் குறித்து முற்றிலுமாக ஞானமானது ப்ரகாசமாகவே உள்ளது.

வ்யாக்யானம் – (கூராராழி வெண்சங்கேந்தி) ஸ்ரீபாஞ்சஜந்யத்தில் வெண்மையோபாதி திருவாழியில் கூர்மையும் இவர்க்கு ஆகர்ஷகமாயிருக்கிறபடி. (கூராராழி) ப்ரதிபக்ஷத்தைத் துணிக்கத் துணிக்கச் சாணையிலேறிட்டாற்போலே கூர்மை மிக்கிருக்கிறபடி. அஸாதாரண விக்ரஹத்துக்கு லக்ஷணமோதான் கையுந் திருவாழியுமா யிருக்கை!

விளக்கம் – (கூராராழி வெண்சங்கேந்தி) - “வெண்சங்கு” என்பது போன்று, அழகிற்குக் காரணமாக உள்ளதாகச் சக்கரத்தாழ்வானைக் கூறாமல், கூர்மையை ஏன் கூறினார் என்றால், ஸ்ரீபாஞ்சஜந்யத்தின் வெண்மையைப் போன்றே சக்கரத்தின் கூர்மையும் இவரைக் கவர்ந்து இழுப்பதாக உள்ளது. (கூராராழி) – “ஆர்” என்பதற்கு பொருள் கூறுகிறார்; விரோதிகளை அழிக்க அழிக்க, சாணைக் கல்லில் ஏற்றப்பட்டது போன்று கூர்மை அதிகமாவதால், இவ்விதம் கூறினார். அவனுக்கே உரிய திருமேனியைக் காண விரும்பும் இவர், “கூராராழி

வெண்சங்கேந்தி” என்று ஏன் கூறவேண்டும் என்றால், அவனுக்கே உரியதான திருமேனியின் அடையாளம், “திருக்கரமும் சக்கரமும்” என்று இருந்தலே ஆகும்.

வ்யாக்யானம் - (கொடியேன்) எனக்கு இங்ஙனே ஒரு நிர்ப்பந்தமுண்டாவதே! என் ஸ்வரூபத்துக்கு விருத்தங்கிடீர் நான் பண்ணுகிறது! ஸ்ரீபரதாழ்வானைப் போலே பொகட்ட விடத்தே கிடக்கவல்ல ப்ரக்ருதியாகப் பெற்றிலேன்; இளையபெருமாளைப் போல, “நில்” என்ன, “குருஷ்வ” என்று நிர்ப்பந்திக்கும் ப்ரக்ருதியாவதே!

விளக்கம் – (கொடியேன்) - எனக்கு இப்படியொரு நிர்ப்பந்தம் ஏற்படுகிறதே! எனது “அவனுக்கு மட்டுமே வசப்பட்ட நிலை” என்பதான எனது ஸ்வரூபத்திற்கு விரோதம் உண்டாகும்படி நான் செய்கிறேன். இதனை ஓர் உதாரணத்துடன் விளக்குகிறார்; ஸ்ரீபரதாழ்வான் போன்று விட்டுச் சென்ற இடத்திலேயே கிடக்கவல்ல தன்மை கொண்டிருக்கவில்லை. மாறாக, லக்ஷ்மணனைப் போன்று, இராமன் “இங்கேயே இருப்பாயாக” என்று கூறியபோதிலும், அயோத்யாகாண்டம் (31-22) – குருஷ்வ - என்னைக் கைங்கர்யம் செய்ய ஏற்பாயாக - என்று நிர்ப்பந்தம் செய்யும் தன்மை கொண்டவனாக உள்ளேன்.

வ்யாக்யானம் - (வாராய்) ஆசைப்பட்டாலும் நடக்கவல்லார் வருமித்தனையிறே; “வாராய்” என்னுங்காட்டில் வந்து கொடு திரியப்போமோ? என்னில்; (ஒருநாள்) நானுளனாகைக்காக. விடாயர் “ஒருகால் நாக்கு நனைக்கத் துளி தண்ணீர்” என்னுமாபோலே. (மண்ணும் விண்ணும் மகிழவே) எனக்காக வந்திலையாகிலும் உன் விபூதி யழியாமைக்கு வா என்கிறார். “மானாவிச்சோலைபோலே ஆவதழிவதான இது போனால் என் செய்யவேணும்?” என்றிருக்கிறாயாகில், அவ்விபூதியும் அழியுங் கிடாய்: இது அழியவே அதுவும் அழிந்ததாமிறே; அதுவும் இருக்கச் செய்தேயன்றோ, இது அழிய “ஸ ஏகாகீ ந ரமேத” என்றது. இனித்தான் ப்ரளயத்துக்கழியா தென்னுங்காட்டில், ஆர்த்திக்கும் அழியாதென்றதாகாதே! (மகிழவே) அழிகை தவிர்ந்து தரிக்கைக்காக.

விளக்கம் – (வாராய்) - அவன் வரவேண்டும் என்று ஏன் இவர் ஆசைப்படவேண்டும், மாறாக இவர் அங்கு செல்லலாம் அல்லவோ என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்; ஆசைப்பட்டாலும், நடக்கவல்லவர் வருவார்கள்

அல்லவோ? "வாராய்" என்று கூறியவுடன் வந்து நிற்பானோ? அல்லது, அவனை எங்களால் கொண்டு வந்து நிறுத்த இயலுமோ? (ஒருநாள்) – நான் ஒரு பொருளாக இருப்பதற்கு உயிர் தரிக்கவேண்டும் அல்லவோ, அதற்காகவாவது. தாகம் கொண்டவன் "ஒருமுறை நாக்கு நனைக்கத் துளி தண்ணீர் வேண்டும்" என்று உள்ளது போன்று இவரும் கூறுகிறார். (மண்ணும் விண்ணும் மகிழவே) - எனது இருப்பு என்பது அழியாமல் இருப்பதற்காக வரவில்லை என்றாலும், உனது இருப்பு என்பது அழியாமல் இருப்பதற்காகவாவது வருவாயாக என்றார். மஹாநவமியில் செய்யப்படும் அலங்காரம் போன்று, ஆவதும் அழிவதும் என்றுள்ள இந்த லீலாவிபூதி அழிந்தால் என்ன என்று நீ உள்ளாய் என்றால், அந்த நித்யவிபூதியும் அழியும் என்பதைக் கவனத்தில் கொள்வாயாக. ஆனால், நித்யவிபூதியும் அழியுமோ என்றால், லீலாவிபூதி அழிந்தால், அதுவும் அழியும். அது நிலையாக உள்ளபோது, இது மட்டுமே அழிந்தபோது அல்லவோ உபநிஷத்தில் "ஸ ஏகாகீ ந ரமேத - தனியே இருந்த அவன் மகிழ்ச்சி கொள்ளவில்லை" என்று கூறப்பட்டது. ப்ரளயத்தில் அழியாது என்றபோதிலும், துன்பத்திற்கு அழியாமல் இருக்கும் என்று கருத்து அல்ல அல்லவோ? (மகிழவே) – அழிதல் நீங்கி உயிர் தரிப்பதற்காக.

6-9-2. மண்ணும் விண்ணும் மகிழ குறள் ஆய் வலம் காட்டி
மண்ணும் விண்ணும் கொண்ட மாய அம்மானே
நண்ணி உனை நான் கண்டு உகந்து கூத்தாட
நண்ணி ஒரு நாள் ஞாலத்தூடே நடவாயே

பொருள் - இந்தப் பூமியும் விண்ணும் உகக்கும்படியாக, பெரிய வடிவத்தைச் சிறியதாக்கி வாமநனாக, யாசித்த உடனேயே தனது திருக்கரத்தில் நீர் விழுந்தவுடன் ஓங்கி வளர்ந்து, அனைத்து சக்திகளுடைய சேர்க்கையும் வெளிப்படும்படியாக, பூமியையும் விண்ணையும் அளந்து கொண்டு வியக்க வைக்கும் லீலைகள் பொருந்திய ஸ்வாமியானவனே! மற்ற பலன்களை எதிர்ப்பார்ப்பவர்களும் கூட வெளிப்பட்ட வடிவழகு கொண்ட உன்னைக் கண்டால் அல்லாமல் தரிக்கமாட்டாத ஆசை கொண்ட நான், அந்த வடிவழகோடு நீ வந்து, மனதால் காண்பது அல்லாமல் நேரடியாகவே கண்களால் கண்டு மகிழும்படியாக, அதன் விளைவாக நான் கூத்தாடும்படியாக, மஹாபலியின் யாக பூமியில் வந்தது போன்று, எனக்காக இந்தப் பூமியில் ஒருநாள் நடந்து வரவேண்டும்.

அவதாரிகை – "வாராய் என்று நிர்ப்பந்தித்தல்ல காணும், நம்மைக் காண்பது! உம்மை ஒரு தேச விசேஷத்திலே யழைத்துக் காணும் காட்டுவது" என்ன; அவ்வடிவு தன்னையே இங்கே கொடு வந்து இதர ஸஜாதீயமாக்கிக் காட்டிற்றிலையோ வென்கிறார்.

விளக்கம் – ஸர்வேச்வரன் ஆழ்வாரிடம், "நீவிர் நம்மை 'இங்கு வருவாயாக' என்று நிர்ப்பந்தம் செய்து காண முயலவேண்டாம். உம்மை நான் பரமபதத்திற்கு அழைத்து எம்மைக் காண்பிப்போம்", என்றான். இதற்கு ஆழ்வார், "அந்த வடிவழகுடன் இங்கு வந்து, மற்ற சேதநர்கள் போன்று காண்பிக்கமாட்டாயா?", என்றார்.

வ்யாக்யானம் - (மண்ணும் விண்ணும் மகிழக் குறளாய்) இவ்வளவில் ஸ்ரீவாமநனாய் வந்து தோற்றிற்றிலையாகில், உபயவிபூதியும் அழியுமாகாதே ஒரு பாட்டம் மழை விழுந்தால் பதார்த்தங்களடையச் செவ்வி பெறுமாபோலே உகவாதாரும் மகிழும்படியன்றோ வந்து தோற்றிற்று. (வலங்காட்டி) ஔதார்யமென்றொரு குணலேசங் கிடக்கையாலே ராவணாதிகளைப்போலே அம்பாலே யழிக்கப் போகாதே; அழகாகிற பலத்தைக் காட்டி வாய் மாளப் பண்ணினபடி. சுக்ராதிகளுடைய நிரோதமுண்டாயிருக்கச் செய்தேயிறே யழகுக்குத் தோற்றுக் கொடுத்துக் கொண்டு நின்றபடி.

விளக்கம் - (மண்ணும் விண்ணும் மகிழக் குறளாய்) - மஹாபலிக்காக ஒரு வாமனனாய் இங்கு வந்து தோன்றவில்லை என்று வைத்துக் கொண்டாலும், இரண்டு விபூதிகளும் அறியாதபடி, ஒரு பாட்டம் மழை மூலம் அனைத்துப் பொருள்களும் வளம் பெறுவது போன்று, உன்னைக் கண்டு மகிழ்ந்தவர்கள் கூட மகிழ்ச்சி கொள்ளும்படியாக அல்லவோ நீ வந்து தோன்றினாய். (வலம் காட்டி) - ஏன் அழகைக் காண்பிக்கவேண்டும், மஹாபலியை ஹிம்ஸித்து அனைத்தையும் மீட்டிருக்கலாம் அல்லவோ என்பதற்கு விடை அருளிச்செய்கிறார். தாராள குணம் என்பதாக ஒரு தன்மை உள்ளதால், இராவணன் போன்று அம்பு கொண்டு அழிக்க முயலாமல், தனது அழகு என்னும் பலத்தைக் காண்பித்து, மஹாபலியின் வாய் பிளக்கும்படிச் செய்தான். "வாய் மாளப் பண்ணி" என்று ஏன் கூறவேண்டும்; இவன் செய்தது "கபடம்" என்று அறியாத காரணத்தால் மஹாபலி அளித்தான்

என்று கூறலாம் அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார்; அங்கு சுக்ராசார்யார் போன்றவர்களுடைய மதியூகம் இருந்தபோதிலும் அல்லவோ இவனுடைய அழகிற்குத் தோற்று மஹாபலி அனைத்தையும் அளித்தான்; ஆகவே இவ்விதம் கூறினார்.

வ்யாக்யானம் - (குறளாய்) கோடியைக் காணியாக்கினாற்போலே முகந்து கொள்ளலா யிருக்கை. (மண்ணும் விண்ணுங் கொண்ட) பூம்யந்தரிக்ஷாதிகளைக் காற்கீழே யிட்டுக் கொண்ட. இந்த்ரனுக்குக் "கொடுத்த"வென்னாதே, "கொண்ட" என்கிறது. அவன் ஆஸுர ப்ரக்ருதியாகையாலே அவன் பக்கல் தானே கொண்டானாகக் கொண்டபடியும், ஆச்ரிதனான இந்த்ரனுடைய அவிபாக ரஸத்தாலும்.

விளக்கம் - (குறளாய்) - "குறளாய்" என்று வாமனத்தன்மை கூறப்பட்டபோது, "அழகைக் காட்டினான்" என்று ஏன் கூறவேண்டும் என்பதற்கு விடை அளிக்கிறார்; கோடியை, சிறிய அளவான காணி என்று ஆக்கியது போன்று, தனது அழகை எளிதில் அனுபவிக்கலாம்படி நின்ற நிலை. (மண்ணும் விண்ணுங் கொண்ட) - பூமி மற்றும் ஆகாயம் ஆகிய அனைத்தையும் தன் முன்பாக ஒரு சிறிய வஸ்து என்றாக்கிய நிலை. மண்ணையும் விண்ணையும் மஹாபலியிடன் வாங்கிக் கொண்ட உடனேயே இந்த்ரனிடம் அளித்தாலும், இங்கு "இந்த்ரனுக்குக் கொடுத்த" என்று கூறாமல் "கொண்ட" என்று ஏன் கூறினார்? மஹாபலியானவன் அஸுர பிறவி என்பதால், அவனிடமிருந்து தானே பெற்றுக் கொண்டான்; இந்த்ரன் தனது அடியவன் என்பதால், தானே அளித்தான்.

வ்யாக்யானம் - (மாயவம்மானே) ஸ்ரீய:பதியானவன் அர்த்தியானபடியும், வடிவழகைக் காட்டி. வாய்மாளப் பண்ணினபடியும், "கொள்வனான் மாவலி" என்றாற்போலே சில முக்தஜல்பிதங்களைப் பண்ணினபடியும், சிறு காலைக் காட்டிப் பெரிய காலாலே யளந்தபடியுந் தொடக்கமான ஆச்சர்யங்களைச் சொல்லுகிறது. (அம்மானே) "தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம்" என்கிற பொதுவான ஸ்வாமித்வமிறே அங்ஙன் செய்ய வேண்டிற்று? (நண்ணியுனை நான் கண்டுகந்து கூத்தாட) இந்த்ராதிகளைப் போலே யெனக்கு ராஜ்யாபேக்ஷையில்லை காண்! நீ பண்ணித் தந்த வெளிச்சிறப்பாலே த்ருப்தனாகிறிலேன். நானுன்னைக் கிட்டிக் கண்டு உகந்து கூத்தாடும்படி

வரவேணும். வருகைக்குண்டான வியாபாரம் அவன் தலையது; வந்தால் உகக்கையிலே இவர்க்கந்வயம்.

விளக்கம் – (மாய அம்மானே) - மஹாலக்ஷ்மியின் நாதன், தானே சென்று யாசகம் கேட்ட விதம், தனது வடிவழகைக் காண்பித்து மஹாபலியை வாய் பிளக்கும்படிச் செய்த விதம், "கொள்வன் நான் மாவலி" என்பது போன்று சில மழலைச்சொற்கள் பேசிய விதம், சிறிய திருவடியால் காண்பித்து பின்னர் பெரிய திருவடி கொண்டு அளந்த விதம் என்பது போன்று வியக்க வைக்கும் செயல்கள் கூறப்பட்டது. (அம்மானே) - அவனைத் தண்டிக்காமல், அளந்து எடுத்து கொண்டதன் காரணம், அவனுடனான ஸம்பந்தமே ஆகும் என்பதற்கு ப்ரமாணம் ஜிதந்தா ஸ்தோத்ரம் - தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம் – தேவர்கள் மற்றும் தானவர்கள் ஆகியோருடைய பொதுவான தெய்வம் – என்பதாகும். தனது அழகின் பலத்தைக் காண்பித்து இப்படியாகப் பெற வேண்டியதாக இருந்தது. (நண்ணி உனை நான் கண்டு உகந்து கூத்தாட) - ஆழ்வார் ஸர்வேச்வரனிடம், "இந்த்ரன் முதலியவர்களைப் போன்று எனக்கு ராஜ்யம் போன்றவற்றின் மீது ஆசை இல்லை. நீ எனக்கு அளித்த ஞானம் காரணமாக நான் உன் விஷயத்தில் த்ருப்தி அடையாமல் உள்ளேன். நான் உன்னை அடைந்து, உன்னைக் கண்டு மகிழ்ந்து, கூத்தாடும்படியாக நீ வரவேண்டும்", என்கிறார். அவன் இவரிடம் வருவதற்கான செயல்களைச் செய்வது அவன் பொறுப்பு, அவன் வந்தால் மகிழ்வது மட்டுமே இவர் செயல் ஆகும்.

வ்யாக்யானம் - (நான் கண்டுகந்து கூத்தாட) மஹாபலியைப்போலே ஒன்று கொடுக்க இருக்கிறேனல்லேன்; இந்த்ரனைப் போலே ஒன்று கொள்ள இருக்கிறேனல்லேன்; "எனக்கு" என்று இருப்பாரோடும், "என்னது" என்றிருப்பாரோடுமோ நீ கொடுத்துக் கொண்டு பரிமாறுவது? உன்னையே கண்டு உகப்பார்க்கு உன்னைக் காட்டலாகாதோ? "ஸம்ப்ரமைஸ் துஷ்ய கோவிந்த ஏதந்ந: பரமம் தநம்" என்கிற இதிலேயிறே இவர்க்கு அந்வயம். (நண்ணி) - நானிருந்தவிடத்தே நீ வந்து கிட்டி.

விளக்கம் - (நான் கண்டு உகந்து கூத்தாட) - மஹாபலியைப் போன்று நான் ஏதேனும் ஒன்றையாவது உனக்கு தருவதற்குத் தயாராக இல்லை. இந்த்ரனைப் போன்று ஏதும் கொள்வதற்கும் இல்லை. "எனக்கு" என்று இருந்த இந்த்ரன் மற்றும்

“என்னுடையது” என்று இருந்த மஹாபலி ஆகியோருடன் மட்டுமே நீ “கொடுத்தும் கொண்டும்” செய்தபடி இருப்பதா? உன்னையே கண்டு மகிழ்ந்தபடி உள்ளவர்களுக்கு உன்னை நீ காண்பித்தால் ஆகாதோ? இவ்விடம் மகிழ்ந்தபடி உள்ளவர்கள் இருக்கிறார்களா என்பதற்கு ப்ரமாணம் காண்பிக்கிறார்; மஹாபாரதம் உத்யோக பர்வம் – ஸம்ப்ரமைஸ் துஷ்ய கோவிந்த ஏதந்ந: பரமம் தநம் – க்ருஷ்ணா! எங்களுடைய பரபரப்பு மூலம் மட்டுமே நீ மகிழ்வாயாக. இதுவே எங்களுக்கு மிகப் பெரிய மகிழ்வாகும் – என்பது காண்க. (நண்ணி) - நான் உள்ள இடத்திற்கு நீ வந்து என்னைக் கிட்டி.

வ்யாக்யானம் - (ஒருநாள்) பின்பொரு நாள் அச்செயல் செய்யலாகாதோ? மண்ணும் விண்ணும் மகிழ நடக்கலாவது அசுரன் முன்பேயோ? அநந்ய ப்ரயோஜநர் முன்பு நடக்கலாகாதோ? (ஞாலத்தூடே நடவாய்) நடையழகில் வாசி கண்டு அதிலே ஈடுபடாதே, ஔதார்யங் கொண்டாடி யிருக்கும் அவன் முன்னேயோ நடக்கலாவது? நடையழகில் உள்மானம் புறமானங் கண்டு அதுவே ஜீவநமா யிருக்கிற என் முன்னே நடக்கலாகாதோ?

விளக்கம் - (ஒருநாள்) - அஸுரனுடைய யாகசாலைக்கு நடந்து சென்ற அந்த செயலைப் பின்பு ஒருநாள் செய்தல் கூடாதோ? மண்ணும் விண்ணும் மகிழும்படி நடப்பது என்பது அஸுரன் மூலமாக மட்டுமே செய்வாயோ? நீ அல்லாமல் வேறு எந்தப் பயனையும் எதிர்பாராமல் உள்ளவர்கள் முன்பாக அவ்விதம் நடந்து வரக்கூடாதோ? (ஞாலத்தூடே நடவாய்) - உனது நடை அழகிற்கும் மற்றவர்கள் நடை அழகிற்கும் இடையே உள்ள வேறுபாடு அறிந்து அதில் ஈடுபடாமல், தனது தாராள குணத்தை மட்டுமே கொண்டாடியபடி உள்ள மஹாபலி முன்பாக இவ்விதம் நடந்து காண்பிக்கலாமோ? இதனைக் கேட்ட ஸர்வேச்வரன் ஆழ்வாரிடம், “மஹாபலி முன்பாக நாம் நடந்து காண்பித்தோம். உமக்கு முன்பாக நாம் நடக்கவில்லை. இதனால் அவனை வெறுப்பது ஏன்? அவனைக் காட்டிலும் உமக்கு உள்ள வேறுபாடு என்ன?”, என்றான். இதற்கு ஆழ்வார், “அவன் கறுத்த இதயம் கொண்டவன், நான் வெளுத்த இதயம் கொண்டவன்” என்கிறார். நடை அழகில் உள்ள “உள்ளே சிவப்பும், புறத்தில் கறுப்பும் என்னும் சேர்த்தி” கண்டு, அதனையே என் உயிர் தாங்கும் உபாயமாகக் கொண்டுள்ள என் முன்பாக நீ நடந்தால் ஆகாதோ?

6-9-3. ஞாலத்தூடே நடந்தும் நின்றும் கிடந்து இருந்தும்
சாலப் பல நாள் உகம் தோறு உயிர்கள் காப்பானே
கோலத் திரு மா மகளோடு உன்னைக் கூடாதே
சாலப் பல நாள் அடியேன் இன்னும் தளர்வேனோ

பொருள் - ஒவ்வொரு யுகங்களிலும் இந்தப் பூமியில் அவதரித்து நடந்தும், நின்றும், ஸமுத்ரத்தின் முன்பாக ஒரு ஸமுத்ரமே கிடப்பது போன்று திருக்கண்கள் வளர்ந்தருளியும், பெரியபிராட்டியாருடன் சேர்ந்து இனிதாக அமர்ந்தும் என்பதாக இப்படியே பல காலங்கள் அனைத்து உயிர்களையும் காப்பாற்றியபடி உள்ளவனே! நீ எடுத்துக் கொள்ளும் வடிவத்திற்கு ஏற்றாப்போலே உள்ள ரூபம் கொண்டு அவதரிக்கும் மஹாலக்ஷ்மியுடன் கூடியுள்ள உன்னை அண்டி அனுபவிக்காமல், இனி வரும் காலங்கள் முழுவதும், உன்னைக் குறித்த உறவுமுறை அறியாமல் இருந்து, இப்போது நன்கு அறிந்த நான், ருசி பிறக்காத காலங்களில் இழந்து போன்று, ருசி பிறந்த பின்னர் இழப்பேனோ?

அவதாரிகை - ஜகதாகாரனான வடிவு காட்டினது எனக்குப் போராது; அஸாதாரண மான விக்ரஹத்தைக் கொடு வந்து காட்டவேணுமென்றார்; அது உமக்குக் காட்டுவது ஒரு தேச விசேஷத்தே கொடு போய்க் காணுமென்ன, அது தன்னை இங்கே கொண்டு வந்து இதர ஸஜாதீயமாக்கிக் காட்டிற்றிலையோ என்றார். அதொரு நாள் சற்றுப் போது காட்டாறு பெருகினாற் போலே செய்தோமென்ன, "அது காதாசித்கம் என்னவொண்ணாதபடி யுகந்தோறும் ராம க்ருஷ்ணாத் யவதாரங்களைப் பண்ணி ரக்ஷிக்கை உனக்கு ஸ்வபாவமாயிருக்க, நான் நோவுபடக் கடவேனோ" என்கிறார்.

விளக்கம் - இந்த ஜகத்தையே சரீரமாகக் கொண்டுள்ள உனது வடிவத்தை எனக்குக் காண்பித்தது போதாது. உனக்கே உரியதான வடிவத்தைக் கொண்டு வந்து எனக்குக் காண்பிக்கவேண்டும் என்று பாசுரத்தில் கூறினார். அதற்கு ஸர்வேச்வரன், "அதனை நாம், உம்மை பரமபதத்திற்கு அழைத்துச் சென்று காண்பிப்போம்", என்றான்; இதற்கு ஆழ்வார், "அதனை இங்கு மற்றவர்களுடன் கூடி நின்று அவதரித்துக் காண்பிக்கவேண்டும்", என்று கடந்த பாசுரத்தில் கூறினார். இதற்கு ஸர்வேச்வரன், "அவற்றை நாம் அந்தந்த காலகட்டத்தில், காட்டாறு சட்டென்று வெள்ளம் வந்து பெருகுவது போன்று காண்பித்தோம்", என்றான். இதற்கு இவர், "இவ்விதம் ஒரு காலத்தில் மட்டுமே நிகழும் என்று

கூறுதல் கூடாது. ஒவ்வொரு யுகங்களிலும் இராமன் க்ருஷ்ணன் என்பது போன்ற அவதாரங்களை எடுத்து, அனைத்தையும் காப்பாற்றுதல் என்பது உனது இயல்பாக உள்ளபோது, நான் வருந்துவேனோ?", என்கிறார்.

வ்யாக்யானம் - (ஞாலத்தூடே நடந்தும்) ஸதாதர்சநம் பண்ணுவார் முன்னே நடக்கக் கடவ நடையை, காதாசித்கமாக வந்தாலும் கடாக்ஷியாதார் முன்னே கிடீர் நடந்தது! அந்தர் முன்னே நடக்குமாபோலே. "அக்ரத: ப்ரயயௌ ராம:" என்றும், "அத தாசரதிர் வீரோ ராமோ நாம மஹாபல: | விஷ்ணுர் மாநுஷ ரூபேண சசார வஸுதாதலே" என்றும் சொல்லுகிறபடியே நடந்தும். வடதேசத்தினின்றும் போரப் பாடவல்லரா யிருப்பா ரொருத்தர் "பெருமாளைத் திருவடி தொழவேணும்" என்று வர, ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் ஒரு தீர்த்தத்தினன்று இராத் திருமாலையைப் பாடிச் சமைந்து, பெருமாளை யொரு மத்தகஜத்தைக் கைவசப்படுத்துமாபோலே ஏத்தி வசமாக்கிக் கணிசங் கொண்டு, "நாயன்தே! தேவரீர் திருவடிகளுக்குப் போர நல்லானொருவன் தேவரைத் திருவடி தொழ நெடுந்தூரமுண்டு வந்திருக்கிறது; இவனை யழைத்துக் கொண்டு ஸம்பாவநை பண்ணியருள வேணும்" என்ன; அவரைப் பெருமாள் அருளப் பாடிட்டு, திருப்புன்னைக் கீழினின்றும் அவர் நின்றவிடத்தே திருக்கைத்தலத்தே யெழுந்தருளி, விண்ணப்பஞ் செய்வார்களை யருளப் பாடிட்டு, "வாரிகோள்! நாம் இவன் வந்த தூரத்துக்கு எல்லாம் போருமோ செய்ததாம்?" என்று திருவுள்ளமானார்; அப்படியேயிறே நம்மிழவுகளும் திருவுள்ளத்தே பட்டு, அவையெல்லாம் ஆறும்படி முகம் தந்தருளும்படியும்.

விளக்கம் – எப்போதும் உன்னைக் காணவேண்டும் என்றுள்ளவர்கள் முன்பாக நடக்க வேண்டிய நடையை, அவ்விதம் நீ நடந்தாலும், பாராமல் உள்ளவர்கள் முன்பாக அல்லவோ நடந்தாய்! இவ்விதம் நடந்தமைக்குப் ப்ரமாணம் காண்பிக்கிறார். ஆரண்ய காண்டம் (11-1) – அக்ரத: ப்ரயயௌ ராம: - இராமன் முன்னே நடந்தான் – என்றும், மஹாபாரதம் ஆரண்யபர்வம் - அத தாசரதிர் வீரோ ராமோ நாம மஹாபல: | விஷ்ணுர் மாநுஷ ரூபேண சசார வஸுதாதலே - பீமனிடம் அனுமன், "மஹாவிஷ்ணு மனிதப்பிறவி எடுத்து இந்தப் பூமியில் நடந்தார்" - என்றும் கூறுவதற்கு ஏற்ப நடந்தும். ஆகவே அவன் அடியார்களுக்காகச் செய்யும் செயல்களில் ஒரு நிகழ்வைக் கூறுகிறார். நன்கு பாடத் தெரிந்த ஒருவர் வடக்கிலிருந்து "பெரியபெருமாளுடைய திருவடிகளைத் தரிசிக்கவேண்டும்" என்று

எண்ணியபடியே வந்தார். அப்போது ஆழ்வார் திருவரங்கபெருமாள் அரையர், தீர்த்தவாரி நிகழ்ந்த அந்த நாளில், திருமாலை ப்ரபந்தத்தைப் பாடி முடித்துவிட்டு, பெருமாளை மத்தகஜம் புகழ்வது போன்று புகழ்ந்து, தன் வசமாக்கிவிடுவோம் என்று சபதம் பூண்டவராக அரங்கனிடம், “அடியேன்! உனது திருவடிகளுக்கு ஏற்ற ஒருவர், எழுநூறு காத தூரம் உள்ள வழியைக் கடந்து, உன்னுடைய திருவடிகளைத் தொழவேண்டும் என்று வருகிறார். அவரை அழைத்து மரியாதை செய்யும்படியாகச் செய்யவேண்டும்”, என்றார். உடனே அரங்கனும், “அப்படியே செய்கிறோம்”, என்று திருவுள்ளமாக உரைத்தான். சந்திரபுஷ்கரிணியில் உள்ள திருப்புன்னை மரத்தின் கீழிருந்து புறப்பட்டு, நாலு கோல்கள் அளவு முடிய, தோளுக்கினியானில் ஏறாமல், பட்டர்களுடைய திருக்கைத்தலமாகவே, அந்தப் பாடகர் நின்ற இடத்திற்குச் செல்லத் தயாராக புறப்பட்டார். அப்போது விண்ணப்பம் செய்பவர்களை அழைத்து, “வாருங்கள். இவன் கடந்து வந்த தூரத்திற்கு நாம் செய்த இந்தச் செயல் போதுமானதா?”, என்றான். இப்படி அல்லவோ நாம் இழந்த இழப்புகளும், நாம் அடைந்த துன்பம் அனைத்தும் நீங்குவதற்கு ஈடாகத் தனது திருமுகத்தைக் காண்பிக்கத் திருவுள்ளம் கொள்ளுதல் உள்ளது.

வ்யாக்யானம் - (நின்றும்) “அவஷ்டப்யச திஷ்ட்டந்தம் ததர்சதநுரூர்ஜிதம் | ராமம் ராமாநுஜம்சைவ பர்த்துச்சைவாநுஜம்சுபா” தன் பர்த்தாவைக் கொன்ற பெருமாளை “தப்பச் செய்தீரே” என்கையன்றிக்கே, “இவரது குற்றமுண்டோ? தம்மையாச்ரயித்தவர்கள் விரோதி போக்கத் தவிர்வர்களோ? இவனும் அநுகூலித்தானாகில் ரக்ஷியாரோ? தண்ணீர்க் குடிக்கக் கல்லின ஏரியிலே தலைகீழதாக விழுந்து சாவாரைப்போலே தன் குற்றத்தாலே கெட்டானத்தனை கிடீரெ”ன்றாளிறே! இப்படி உகவாதாருடைய ஸ்த்ரீகளுக்கும் ஆகர்ஷகமாம்படியிறே கையும் வில்லுமாய் நிற்கும் நிலையிருப்பது!

விளக்கம் – (நின்றும்) - அடுத்து அவன் நிற்கும் நிலை இன்னது என்றும், அதுவும் கவரும்படியாக இருக்கும் என்றும் அருளிச்செய்கிறார். கிஷ்கிந்தா காண்டம் (19-25) – அவஷ்டப்யச திஷ்ட்டந்தம் ததர்சதநுரூர்ஜிதம் | ராமம் ராமாநுஜம்சைவ பர்த்துச்சைவாநுஜம்சுபா - கம்பீரமாக வில்லை ஏந்தியபடி நிற்கும் இராமனையும், லக்ஷ்மணனையும், தனது கணவனுடைய இளையவனாகிய ஸுக்ரீவனையும் நல்லவளாகிய தாரை பார்த்தாள் - என்பது காண்க. தனது கணவனைக் கொன்ற

இராமனை நோக்கி, “நீவிர் தவறு இழைத்து விட்டீர்” என்று கூறவில்லை; மாறாக, “இராமனிடம் குற்றம் உள்ளதோ? தன்னைச் சரணம் புகுந்தவர்களுடைய விரோதிகளை அழிப்பதற்குத் தவிர்ப்பவர்கள் உள்ளனரா? ஸுக்ரீவனும் இராமனுக்கு ஏற்றபடி இருந்தால் ரக்ஷிக்கமாட்டானோ? தண்ணீர் பருகுவதற்காகச் சென்ற ஏரியில், தலை கீழாக விழுந்து இறப்பவர்கள் போன்று தனது குற்றத்தால் வாலி அழிந்தான்”, என்று அல்லவோ கூறினாள்? இதனையே ச்லோகத்தில் உள்ள “சுபா - நல்லவள்” என்பது காண்பிக்கிறது. ஆகவே அவனை அண்டாதவர்களுடைய மனைவிமார்களையும் கவர்ந்து இழுக்கும் விதமாக அல்லவோ திருக்கரமும் வில்லுமாக நிற்கும் நிலை உள்ளது!

வ்யாக்யானம் - (கிடந்தும்) “பாஹும் புஜகபோகாபமுபதாயாரிஸூதந:” கடலை யநுவர்த்தித்துக் கிடக்கிற கிடைதானே லங்கை குடிவாங்க வேண்டும்படி யிருக்கை. “அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதியே மஹோததே:” ப்ரதிசிச்யே என்கிறதாயிற்று. கடல் தன்னைப் போர அளவு உடைத்தாக நினைத்திருக்குமாயிற்று, அதுக்காக ஒரு கடல் ஒரு கடலோடே ஸ்பர்த்தித்துக் கிடந்தாற் போலே யிருக்கை; “கருணையங்கடல் துயின்றனன் கருங்கடல் நோக்கி” என்னும்படியிறே.

விளக்கம் – (கிடந்தும்) - யுத்தகாண்டம் (21-1) – பாஹும் புஜகபோகாபமுபதாயாரிஸூதந: – ஸர்ப்பத்தின் உடல் போன்ற நீண்ட திருக்கரத்தைத் தலைக்கு அணையாகக் கொண்டு ஸமுத்ரத்தை நோக்கி கிழக்கு முகமாக கைகளைக் குவித்தபடி இராமன் கிடதான் - என்பது காண்க. ச்லோகத்தில் உள்ள “அரிஸூதா:” என்பதை “கடலை” என்று தொடங்கியும், “மஹோததே” என்பதை “போர அளவு உடைத்தாக” என்பது தொடங்கியும் அருளிச்செய்கிறார். கடலை வேண்டியபடி கிடக்கும் நிலையானது, இலங்கை குடிவாங்க வேண்டும்படியாக இருந்தது. அந்த ஸமுத்திரம் தன்னளவு முழுவதும் உள்ளதாக எண்ணி, ஒரு ஸமுத்ரமானது ஒரு ஸமுத்ரத்துடன் பொறாமை கொள்ளும்படியாகக் கிடந்தது எனலாம். கம்பராமாயணத்தில் - கருணையங்கடல் துயின்றனன் கருங்கடல் நோக்கி - என்பது காண்க.

வ்யாக்யானம் - (இருந்தும்) "உபவிஷ்டம் ஸ்வலங்க்ருதம்" என்றும், "உடஜே ராமமாஸீநம்" என்றும் சொல்லுகிறபடியே யிருக்கை. "திருவயோத்யையிலிருக்கும் பேரோலக்கம் சிறியது" என்னும்படியிறே தனியிடத்தில் ஓலக்கமிருந்தபடி. அவ்வோலக்கத்தில் கிட்டும் தம்பிக்கும் கிட்டவொண்ணாதபடியிறே இவ்வோலக்கமிருந்தபடி; "அபித: பாவகோபமம்" நெருப்பு எரியாநின்றால் கிட்டப் போகாதாப்போலே அநபிபவநீயரா யிருந்தவிருப்பு.

விளக்கம் – (இருந்தும்) – அயோத்யாகாண்டம் (16-8) - உபவிஷ்டம் ஸ்வலங்க்ருதம் – அலங்காரம் செய்து அமர்ந்திருந்தவனை – என்றும், அயோத்யாகாண்டம் (99-25) - உடஜே ராமமாஸீநம் - சடையுடன் கூடியபடி அமர்ந்திருந்த – என்றும் கூறுவதற்கு ஏற்ப வீற்றிருத்தல். திருஅயோத்தியில் உள்ள அரச சபையில் கூட்டம் சிறியது என்று கூறலாம்படி அல்லவோ இவன் தனிமையில் இருந்தவிடத்தில் நிலைமை உள்ளது! அந்த அவையில் இளையவனும் அண்டலாம்படி இருந்த நிலை இங்கு இல்லாமல் உள்ளது! அயோத்யாகாண்டம் (99-25) - அபித: பாவகோபமம் – சுற்றிலும் அக்னி சூழ்ந்தது போன்று உள்ளவனை - என்பதற்கு ஏற்ப, அக்னியானது எரியும்போது, அருகில் செல்ல இயலாதது போன்று, அண்டுவதற்கு அரியவனாக இருந்த நிலை.

வ்யாக்யானம் - (சாலப் பலநாள்) உன்னுடைய ரக்ஷணம் அநாதியன்றோ? அன்றிக்கே, நூறாண்டு, பதினோராயிரமாண்டென்றுமாம். (உகந்தோறு) "ஸம்பவாமி யுகே யுகே" என்னுமா போலே. (உயிர்கள்) ஒரு திருவடி, திருவநந்தாழ்வான், பிராட்டிக்காக அன்று கிடீர், ஸர்வாத்ம ஸம்ரக்ஷணமன்றோ உன்னது! (காப்பானே) இவர்களுக்கு அழித்துக் கொள்ளுகை பணியானாற்போலே யிறேயவனுக்கும் நோக்குகை பணியானபடி. நான் கைவாங்கினேன், இனிக் காவற் சோர்வுபடாமல் வேணுமாகில் நோக்கிக்கொள்.

விளக்கம் – (சாலப் பலநாள்) - ஒவ்வொரு கல்பத்திலும் அவதாரம் செய்தருள்வதைக் கருத்தில் கொண்டு "உன்னுடைய காக்கும் தன்மையானது தொடக்கம் அறியாதபடி தொடர்வது அல்லவோ?", என்கிறார். அல்லது, இராமனாகவும் க்ருஷ்ணனாகவும் பல காலம் எழுந்தருளியிருந்ததை எண்ணி, "நூற்றாண்டும், பதினோராயிரம் ஆண்டும்" என்று கூறுவதாகவும் கொள்ளலாம். (உகந்தோறு) - கீதை (4-8) – ஸம்பவாமி யுகே யுகே - ஒவ்வொரு யுகத்திலும் அவதரிக்கிறேன் - என்று கூறுவது

போன்று உரைக்கிறார். (உயிர்கள்) - "உயிர்கள்" என்று பன்மையில் கூறுவது ஏன்? ஒரு திருவடி, ஆதிசேஷன், பெரியபிராட்டி என்பவர்களுக்கு மட்டும் அல்லாமல், அனைத்து உயிர்களையும் காப்பாற்றும் நிலை அல்லவோ உன்னுடையதாக உள்ளது? (காப்பானே) - இவர்களுக்கு அழித்துக் கொள்ளுகை என்பது பணியாக உள்ளது போன்று, உனக்கு நோக்குதல் என்பது பணியாக உள்ளது. என்னை நானே காப்பாற்றிக் கொள்வதிலிருந்து கைவிட்டுக் கொண்டேன்; இனி "எனது காப்பாற்றுதல்" என்பதில் எந்தத் தடையும் இன்றி, உனது காவலில் தவறு ஏற்படாலம், நீ வேண்டுமானால் என்னை நோக்கிக் கொள்வாயாக. ஒருவன் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்வதை, நிறுத்திக் கொண்டால் அவன் காப்பானோ என்பதற்கு உதாரணம் காண்பிக்கிறார்; யுத்தகாண்டம் (25-32) – ராம லக்ஷ்மண குப்தாஸா ஸுக்ரீவேண ச வாஹிநீ - ஸுக்ரீவனோடு சேர்ந்த இந்தப் படையானது இராமனாலும் லக்ஷ்மணனாலும் காப்பாற்றப்பட்டது - என்பது காண்க. இந்த ச்லோகத்தை அடுத்து வ்யாக்யானம் செய்கிறார்.

வ்யாக்யானம் - "ராம லக்ஷ்மண குப்தாஸா ஸுக்ரீவேண ச வாஹிநீ" கடற்கரையிலே விட்டபோது பெருமாளை நோக்குகைக்கு, தம்பியார், மஹாராஜர், மைந்த த்விவிதர்கள் உள்ளிட்ட முதலிகளெல்லோரும், லங்கையிலே கிட்ட, ஆகாசமெல்லாம் வெளிக்காவலடைத்து, நிதி நோக்குவாரைப்போலே பெருமாளை நோக்கிக் கொண்டு கிடக்க, இவர்கள் இத்தனைவரும் கண் சோர்ந்தவளவிலே, பெருமாள், தாம் கையும் வில்லுமாய்க் கொண்டு இவர்களுக்குப் புறம்பே நின்று உலாவினார் இறே. அவன் நோக்குகைச்கு இத்தலை கண் செம்பளிக்குமத்தனையிறே வேண்டுவது. நாம் அவனுக்கு ரக்ஷகராக நினைத்திருக்குமது ப்ரமமிறே; உணர்ந்து பார்த்தால் ரக்ஷகனாக வல்லான் அவனேயிறே.

விளக்கம் – யுத்தகாண்டம் (25-32) - ராம லக்ஷ்மண குப்தாஸா ஸுக்ரீவோ வாஜிநீ பபூவ துர்தர்ஷதரா ஸேந்த்ரைரவி ஸுராஸுரை: - இராமனாலும் லக்ஷ்மணனாலும் ஸுக்ரீவனாலும் பாதுகாக்கப்படும் அந்த வானரப்படையை, அனைத்து தேவர்களும் அஸுரர்களும் ஒன்றாகக் கூடி சேர்ந்து வந்தாலும் கூட சிறிதும் அடக்க இயலாது - என்பது காண்க. இராமன் கடற்கரையில் கிடந்தபோது, இராமனைப் பாதுகாக்கும் விதமாக லக்ஷ்மணன், ஸுக்ரீவன், மைந்தன், த்விவிதன் போன்ற பலரும், இலங்கை உள்ள திசையை நோக்கியபடி, அங்கிருந்து யாரும்

வருகிறார்களா என்று பார்த்தபடி நின்றனர். ஆகாசம் முழுவதையும் வெளிக்காவல் காத்தபடி இருந்தார்கள். ஒரு புதையலைப் பாதுகாப்பவர்கள் போன்று இராமனைப் பாதுகாத்து நின்றனர். இவர்கள் இத்தனை பேரும் தங்கள் கண்கள் சோர்ந்து உறங்கியபோது, இராமன் தனது திருக்கரத்தில் வில்லும் அம்புமாக நின்று, இவர்களுக்கு வெளிப்புறத்தைக் காவல் காத்தபடி உலவினான். நாம் நம்மைக் காப்பாற்றிக் கொள்வதிலிருந்து நமது சொந்த முயற்சியைக் கைவிடுதல் என்பது மட்டுமே, அவன் நம்மைக் காப்பதற்கு அடியாகிறது என்பதை, "இவர்கள் அனைவரும் தங்கள் கண்களை மூடுவதே அவன் காப்பாற்றுவதற்கு ஏற்றது" என்றார். நாம் அவனைப் பாதுகாக்கிறோம் என்ற எண்ணமானது, நமது மயக்கம் காரணமாக ஏற்படுவதாகும். ஆனால் அவனுடைய ஸேனையின் மன்னனாகிய ஸுக்ரீவனை, "தானே தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயல்பவன்" என்ற பிரிவில் சேர்க்கலாமோ என்றால், இந்த மயக்கம் காரணமாக அவன் அவ்விதம் எண்ணுகிறான். மயக்கம் தெளிந்து நோக்கினால், "நம்மைக் காப்பவன் அவனே" என்று உரைக்கலாம்.

வ்யாக்யானம் - (கோலத் திருமாமகளோடு உன்னைக் கூடாதே) தாயும் தமப்பனுங்கூடவிருக்கக் கிட்டப் பெறாதே ஸ்தநந்தய ப்ரஜை நாக்கு ஒட்டிக் கிடந்து துடிக்குமாபோலே யிருக்கிறது காணும்! "அநந்யா" என்கிறபடியே அவனும் அவளுமான சேர்த்தியிறே இவர்க்கு ப்ராப்யம். (இன்னம் தளர்வேனோ – சாலப் பலநாள்) முன்பு அநாதி காலமிழந்த நான் இன்னம் அநந்த காலமிழக்கவோ? (அடியேன்) அது கிடக்க, "உன்னாலே யிழந்தாய்" என்று சொல்லிக் கைவிடலாமென்றிருக்கிறாயோ? (இன்னம் தளர்வேனோ) "ஒரு மிதுநம் எனக்கு ப்ராப்யம்" என்று அறிந்த பின்பும் தளருமத்தனையோ? "நீ ரக்ஷகன்" என்றறியாதொழிதல், "வேறு எனக்கு ரக்ஷகமுண்டு" என்றிருத்தல், "நான் எனக்கு ரக்ஷகன்" என்றிருத்தல், "லக்ஷ்மீ ஸநாதமான வஸ்து ப்ராப்யம்" என்றறியாதொழிதல், "எனக்கு நான் உரியேன்" என்றிருத்தல் செய்தேனோ இழக்கைக்கு? ருசி பிறந்த பின்பு இழக்கவோ?

விளக்கம் – (கோலத் திருமாமகளோடு உன்னைக் கூடாதே) - தாயும் தந்தையும் உள்ளபோதிலும், அவர்களை அண்ட இயலாமல் தாய்ப்பால் பருகும் ஒரு குழந்தை நாக்கு ஒட்டிக் கிடந்து துடிப்பது போன்று இவள் நிலை உள்ளது. "உன்னைக் கூடாதே" என்று மட்டுமே கூறாமல் "கோலத் திருமாமகளோடு உன்னைக்

கூடாதே” என்று ஏன் கூறினார் என்றால், “அநந்யா - அவனை விட்டு வேறு என்றாகாதவள்” என்பதற்கு ஏற்ப, அவனும் அவளுமாக உள்ள சேர்த்தி அல்லவோ இவருக்குப் பேறாக உள்ளது! (இன்னம் தளர்வேனோ – சாலப் பலநாள்) - இதுவரை எல்லையற்ற காலம் உன்னை இழந்துள்ள நான், இனியும் எண்ணற்ற காலம் இழப்பேனோ? (அடியேன்) – “உன்னை நீயே காப்பாற்றிக் கொள்ள முனைந்ததால் என்னை இழந்தாய்” என்று என்னிடம் கூறி, என்னைக் கைவிடலாம் என்று உள்ளாயோ? (இன்னம் தளர்வேனோ) – “ஒரு ஜோடி எனக்குப் பேறு” என்று அறிந்த பின்னரும் நான் தளர்வேனோ! நீயே எனக்கு ரக்ஷகன் என்பதை நான் அறியாமல் இருத்தல், எனக்கு வேறு ரக்ஷகன் உண்டு என்று எண்ணியபடி இருத்தல், மஹாலக்ஷ்மியின் நாதனே எனக்குப் பேறு என்று அறியாமல் இருத்தல், எனக்கே நான் உரியவன் என்று எண்ணுதல்” என்பதாக நான் இருந்தேனோ? இவ்விதம் இருந்தால் அல்லவோ நான் உன்னை இழப்பேன்? உன்னைக் குறித்த ருசி ஏற்பட்ட பின்னரும் நான் உன்னை இழப்பேனோ?

வ்யாக்யானம் - இப்பாட்டால் அகாரார்த்தத்தை ஸக்ரமமாக வ்யாக்யாநம் பண்ணுகிறார். “அவரக்ஷணே” இறே தாது. ரக்ஷிக்குமிடத்தில், ஸர்வப்ரகாரமாக ரக்ஷிக்கவேணும்; அதுதான் ஸர்வகாலமும் ரக்ஷிக்கவேணும்; அப்படி ரக்ஷிக்குமிடத்தில் ஸர்வரக்ஷகனாக வேணும்; இப்படி வரையாதே ரக்ஷிக்குமிடத்தில், “ந கச்சிந்நாபராத்யதி” என்னுமவளும், “என்னடியார் அது செய்யார்” என்னுமவனுங் கூடவாயிற்று; ஆகையாலே, அகாரம் மிதுநத்துக்கு வாசகமாயிற்று. “ஞாலத்தூடே” இத்யாதியாலே ஸர்வப்ரகார ரக்ஷகத்வஞ் சொல்லிற்று; “சாலப் பலநாள்” இத்யாதியாலே ஸர்வகால ரக்ஷகத்வஞ் சொல்லிற்று; “உயிர்கள்” என்கையாலே ஸர்வரக்ஷகத்வஞ் சொல்லிற்று; “கோலத் திருமாமகளோடுன்னைக் கூட” என்கையாலே ஸ்ரீய:பதியே ப்ராப்யம் என்றது.

விளக்கம் – இந்தப் பாசுரமானது ப்ரணவத்தில் உள்ள “அ” என்பதன் பொருள் என்று அருளிச்செய்கிறார். ஆகவே, அகாரத்தின் பொருள் முறைப்படி வ்யாக்யானம் செய்கிறார். “அவனே ரக்ஷகனே” என்பதே மூலம் அல்லது தாதுவாக உள்ளது. அதாவது ரக்ஷிக்கும் ஒருவன், ரக்ஷிக்கும்போது அனைத்துவிதங்களிலும் ரக்ஷிக்கவேண்டும், அனைத்து காலங்களிலும் ரக்ஷிக்கவேண்டும், இவ்விதம் காக்கும்போது அனைவரையும் காக்கவேண்டும். இவ்விதம் எந்தவிதமான

தடையும் இன்றி ரக்ஷிக்கும்போது யுத்தகாண்டத்தில் - ந கச்சிந்நாபராத்யதி - தவறு செய்யாதவர்கள் யாரும் இல்லை - என்று கூறும் அவளும், பெரியாழ்வார் திருமொழியில் - என்னடியார் அது செய்யார் - என்று கூறும் அவனும் சேர்ந்து உள்ளதாகிறது. எனவே அகாரம் என்பது அந்த இருவரையும் குறிப்பதாகிறது. அடுத்து "ஞாலத்தூடே ... காப்பானே" என்பதன் மூலம் அனைத்து விதங்களிலும் காப்பாற்றுதல் கூறப்பட்டது. "சாலப் பலநாள் யுகம்தோறும்" என்பதன் மூலம் அனைத்து காலங்களிலும் காப்பாற்றுதல் கூறப்பட்டது. அடுத்து "உயிர்கள்" என்கையால் அனைத்தையும் காப்பாற்றுதல் என்பது கூறப்பட்டது. "கோலத்திருமகளோடு உன்னைக் கூட" என்பதன் மூலம், மஹாலக்ஷ்மியின் நாதனே பேறு என்று கூறப்பட்டது.

வ்யாக்யானம் - அகார விவரணமான திருமந்த்ரார்த்தமுஞ் சொல்லுகிறது; "கோலத்திருமாமகளோடுன்னை" என்கையாலே, ப்ரஹ்ம ஸ்வரூபஞ் சொல்லிற்று; "அடியேன்" என்கையாலே, ப்ரத்யகாத்ம ஸ்வரூபஞ் சொல்லிற்று; "உயிர்கள் காப்பான்" என்கையாலே, உபாயஞ் சொல்லிற்று; "உன்னைக் கூட" என்கையாலே, பலஞ் சொல்லிற்று; "உன்னைக் கூடாதே – தளர்வேனோ" என்கையாலே, விரோதி சொல்லிற்று.

விளக்கம் – அடுத்து அகாரத்தின் விளக்கமான திருமந்த்ரத்தின் பொருளும் கூறப்படுகிறது. "கோலத்திருகளோடு உன்னை" என்பதால் ப்ரஹ்ம ஸ்வரூபம் கூறப்பட்டது. "அடியேன்" என்பதால் ஜீவ ஸ்வரூபம் கூறப்பட்டது. "உயிர்கள் காப்பான்" என்பதால் உபாயம் கூறப்பட்டது. "உன்னைக் கூட" என்பதால் பலன் கூறப்பட்டது "உன்னைக் கூடாதே தளர்வேனோ" என்பதால் விரோதி ஸ்வரூபம் கூறப்பட்டது.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி பெரியாழ்வார் அருளிச் செய்த

பெரியாழ்வார் திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை அருளிச் செய்த
ஸ்வாபதேச வ்யாக்யானம் (மூலம் மட்டும்) மற்றும்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த
வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 8)

1-2-2. முத்தும் மணியும் வயிரமும் நன்பொன்னும்
தத்திப் பதித்துத் தலைப்பெய்தாற் போல் எங்கும்
பத்து விரலும் மணிவண்ணன் பாதங்கள்
ஒத்திட்டு இருந்தவா காணீரே ஒள் நுதலீர் வந்து காணீரே

பொருள் - முத்துக்களையும் இரத்தினங்களையும் வைரத்தையும் தூய்மையான பொன்னையும் மாறிமாறிப் பதித்துச் சேர்த்தது போன்று, எங்கும் நீலரத்தினம் போன்ற வர்ணத்தையுடைய கண்ணனுடைய திருவடிகளிலுள்ள பத்து விரல்களில் நன்கு சேர்ந்திருக்கும் வர்ணங்கள் இருந்தபடியை காணுங்கள். ஒளி பொருந்திய நெற்றியுடைய பெண்களே! நீங்கள் வந்து காணுங்கள்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேச அவதாரிகை - திருவடிகளில் அகவாயிலழகை அநுபவித்தாராய் நின்றார் கீழ். இப்பாட்டில் திருவடிகளில் திருவுகிருடனே திருவிரல்களை அநுபவிக்கிறார்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம் - (முத்தும்மணியுமித்யாதி) திருவடிகளுக்குச் செம்பஞ்சிட்டா ளாகையாலே திருவிரல்களுக்கும் மாறி மாறி ஒன்பது விரலுக்கும் நவரத்ந வர்ணத்தையும் மற்றை ஒரு விரலுக்கு ஸ்வர்ண வர்ணத்தையுமிட்டு அலங்கரித்து அவள் அநுபவித்த ப்ரகாரம் இவர் திருவுள்ளத்திலே ப்ரகாசித்து அநுபவிக்கிற இவர்க்கு தாத்காலிகமாய்

தோற்றுகிறது. (முத்தித்யாதி) “முத்தும் மணியும் வயிரமும்” என்றது, நவரத்தத்துக்குமுபலக்ஷணம், ரத்தத்தளவிலன்றிக்கே தன் ப்ரேமத்தாலே முத்தை முற்பட இட்டு மாணிக்கத்தை இடுகையாலே “தத்திப் பதித்து” என்கிறது. “தத்தி” என்றது, தத்தவாய், மாறப் பதித்தென்றபடி. “வணங்கி” என்றது, வணங்கவென்றாப்போலே. “தலைப்பெய்தாப்போல்” என்கையாலே நீளமுடைத்தான பத்து நீல ரத்நத்தின் அக்ரத்திலே நவரத்ந வர்ணத்தையும் பொன்னின் வர்ணத்தையும் சேர்த்தாப்போலே இருந்ததென்கை. ஓராபரணத்திலே நவரத்நத்தையும் முத்தையும் அழுத்திச் சேர அதுபவிப்பாரைப் போலே அநுபவித்து, இவை உபமாநம் போராமையாலே “மணிவண்ணன் பாதங்கள் பத்து விரலும் ஒத்திட்டிருந்தவா காணீரே” என்கிறார். (ஒண்ணுதலீர் வந்து காணீரே) ஒளியையுடைத்தான நெற்றியையுடையவர்களென்றபடி. நுதல் - நெற்றி. “ஒண்ணுதல்” என்கையாலே ப்ரபத்தி ப்ரகாசகமான தாந்தியை யுடையவர்களென்றபடி.

மாமுனிகள் வ்யாக்யான அவதாரிகை - திருவடிகளிலகவாயை அநுபவித்தாராய் நின்றார்கீழ்; இப்பாட்டில் திருவடிகளில் திருவுகிருடனே திரு விரல்களை அநுபவிக்கிறார்.

விளக்கம் – திருவடிகளில் உள்ளங்காலினை அனுபவித்து நின்ற யசோதை, இப்பாட்டில் நகத்தினையும் விரல்களையும் அனுபவிக்கிறாள்.

மாமுனிகள் வ்யாக்யானம் - (முத்துமித்யாதி) திருவடிகளுக்குச் செம்பஞ்சு சாத்துகிறபோது ஒன்பது விரலுக்கும் நவரத்ந வர்ணத்தையும், மற்றொரு விரலுக்கு ஸுவர்ண வர்ணத்தையும் பரபாகம் தோற்ற மாறி மாறிச் சாத்துகையாலே நீலரத்தம் போன்ற வடிவையுடையவனுடைய திருவடிகளில் பத்து விரலும், முத்து மாணிக்கம் வயிரம் முதலான நவரத்நங்களையும் நல்ல பொன்னையும் மாறி மாறிப் பதித்துச் சேர்த்தாப்போலேயாய், திருவிரல்களினுடைய லக்ஷணத்தில் ஒன்றுங் குறைவின்றிக்கே எங்கும் தன்னில் சேர்ந்திருந்தபடியைக் காணுங்கோள்; ஒள்ளிய நுதலையுடைய நீங்கள் வந்து காணுங்கோளென்கை. “முத்தும் மணியும் வயிரமும்” என்றவிது, அல்லாத ரத்நங்களுக்கும் உபலக்ஷணம். நுதல் - நெற்றி.

விளக்கம் – (முத்தும் இத்யாதி) - திருவடிகளுக்குக் குங்குமப்பூக் குழம்பினைச் சாற்றும்போது, ஒன்பது விரலுக்கு நவரத்ன வர்ணத்தை உடைய சாந்தினையும், மற்றொரு விரலுக்குப் பொன் நிறம் தோற்றுவிக்கும் சாந்தினையும், ஒவ்வொரு வர்ணமும் ஒன்றொடு ஒன்று பொருந்தும் வகையில் மாறி மாறிச் சாற்றியதால், நீலரத்னம் போன்ற வடிவை உடையவனுடைய திருவடிகளில் உள்ள பத்து விரல்களும் எவ்வாறு இருந்தன என்றால் – முத்து, மாணிக்கம், வைரம் முதலான நவரத்னங்களையும், தூய்மையான பொன்னையும் மாறி மாறி நன்கு அழுத்திப் பதித்துச் சேர்த்தது போலவும், ஒவ்வொரு விரலும் ஸாமுத்திரிகா லக்ஷணத்தில் எவ்விதமான குறைபாடும் இல்லாதபடி நகங்களோடு கூடியதாகவும், விரல்களில் வர்ணங்கள் நன்கு சேர்ந்திருந்ததாகவும் இருந்தன. இப்படிப்பட்ட விரல்களை வந்து காணுங்கள். (ஒள் நுதலீர்) – ஒளி பொருந்திய நெற்றியை உடைய பெண்களே! அதாவது திருவடிகளையே கதி என்று கொண்டு, மேலும் அதில் பூரித்து ஈடுபடுவதால், இயல்வாகவே புலன்கள் பின்னே செல்லாதவர்கள். (வந்து காணீரே) - வந்து காணுங்கள்.

ஸ்வாமி பெரியாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி திருமங்கையாழ்வார் அருளிச் செய்த

பெரிய திருமொழி

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 7)

வ்யாக்யானம் - (வாடினேன்) கொம்பை இழந்த தளிர்போலே; ஆச்ரயத்துக்கு அழிவில்லாமையாலே. இன்னும் நோக்குவோம் என்னில்; நோக்குகைக்கு யோக்யதை யுண்டென்கை. "அநந்யா ராகவேநாஹம்" என்கிற பிராட்டியோடொத்த ப்ராப்தி ஸகலாத்மாக்களுக்கு முண்டான பின்பு இப்ப்ராப்தியை யுணர்ந்தால் அநாதி காலமிழந்தவர்க்கு "வாடினேன்" என்னத் தட்டில்லையிறே. "யச்ச ராமம் ந பச்யேத் து". "ராமம்" என்றது கண்ணுக்கு வகுத்த விஷயத்தை; காணாதிருக்கிறான் யாவனொருவன். எத்தனையேனு முயர்ந்தவனாகவுமாம். இது தப்பினாலும். தப்பாதது தப்பினால் வருமது இவ்வளவன்று என்கைக்காக விசேஷிக்கிறது. "யஞ்ச ராமோ ந பச்யதி" எத்தனையேனும் சிறியாரும் இவர் கண்பார்வைக் கிலக்காகாதாரில்லை. "யம்" எத்தனையேனும் சிறியவனென்கிறது. எத்தனையேனும் சிறியாரிறே இவர் கண்ணிற் பார்வைக் கிலக்காவார்.

விளக்கம் - (வாடினேன்) - கிளையினை இழந்து வாடும் துளிர் இலை போன்று வாடினேன். ஆத்மாவிற்கு அழிவில்லாதபடியால், "அழிந்தேன்" என்று கூறாமல் "வாடினேன்" என்கிறார். ஆனால் திருவாய்மொழி (2-4-1) – வாடி வாடும் இவ்வாள்நுதல் -என்று பிராட்டி அடையக்கூடிய வாட்டத்தை இவர் தாம் அடைந்ததாகச் சொல்லக்கூடியது தகுமோ என்பதற்கு விடை அளிக்கிறார். ஸுந்தரகாண்டம் (21-15) - அநந்யா ராகவேந அஹம் பாஸ்கரேந ப்ரபா யதா -

ஸீதை இராவணனிடம், "எவ்வாறு கதிரவனிடமிருந்து அவனுடைய கதிரைப் பிரிக்கமுடியாதோ அதே போன்று என்னை இராமனிடமிருந்து பிரிக்க முடியாது" என்றாள் – என்பது காண்க; இப்படி ஸீதாபிராட்டியை போன்று எல்லா உயிர்களுக்கும் இயல்பாகவே ஸர்வேச்வரனோடு ஸம்பந்தம் இருப்பதால், இத்தகைய ஸம்பந்தத்தை உணர்ந்து, கணக்கில்லா காலம் இத்தகைய ஸர்வேச்வரனை இழந்தேனே என்று உணர்ந்து, "வாடினேன்" என்கிறார். ஆகவே எவ்விதமான தோஷமும் இல்லை. ஆயினும், "வாடி வாடும்" என்று தாய்மார்கள் பிராட்டியைக் கண்டு கூறியதை, இவர் தாமே தம்மை அவ்வாறு கூறி நிந்தித்துக் கொள்வது சரியோ? இதற்கு விடை, அயோத்யாகாண்டம் (17-14) - ய: ச ராமம் ந பச்யேத் து - யார் ஒருவன் இராமனைக் காணாமல் இருப்பானோ, எவனை இராமனும் காணாமல் உள்ளானோ, அவன் உலகில் நிந்திக்கப்பட்டவனாய் வாழ்வான், அவனுடைய ஆத்மாவும் அவனை நிந்திக்கிறது – என்பது ஆகும். "ராமம்" - என்னும் கண்ணுக்குப் புலப்படக்கூடிய விஷயத்தை காணாமல் உள்ள எவன் ஒருவன்; "ய:" – எத்தனை உயர்ந்தவனாக இருந்தாலும்; "து" - இத்தகைய சேவையானது விட்டுப் போனாலும்; அதாவது நழுவ இயலாத ஸர்வேச்வரனுடைய கருணை நழுவினால் விட்டுப் போகும் சேவையைக் காட்டிலும், இப்படிக் காணாமல் இருப்பது மிகவும் கொடுமையாகும். ஏன்? எப்படிப்பட்ட கருணை என்றால், மிகவும் தாழ்ந்தவனுக்கும் தன்னைக் காண்பித்துக் கொடுக்கும் கருணை. இப்படிப்பட்ட கருணையால் கிட்டும் சேவையைக் காணாமல் இருக்கும் யார் ஒருவனும். "யஞ்ச ராமோ ந பச்யதி" - எவ்வளவு கீழ்மையான ஒழுக்கம் கொண்டவனாயினும், இராமனுடைய கண் பார்வைக்கு இலக்காகாமல் இருப்பது இல்லை. "யம்" - அதாவது, எவ்வளவு கீழ்மையானாவனாகவே இருந்தாலும் இராமனுடைய கண்பார்வைக்கு இலக்காவார்கள்.

ஸ்வாமி திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்